ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2460/28 - 2025 ඔක්තෝබර් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.10.30

*2460/28 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்ளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் கரந்தெணிய பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

இறப்பெய்தியமை காரணமாக கரந்தெணிய பிரதேச சபையின் தவிசாளர் பதவி, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ், தவிசாளர் பதவி வகித்த மஹீல் ரங்கஜீவ முணசிங்ஹ என்பவர் அங்கம் வகிக்கின்ற தேசிய மக்கள் சக்தி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் தவிசாளர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான கரந்தெணிய பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள தவிசாளர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்.

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ரணசிங்ஹ ஹெட்டி ஆரச்சிலாகே சமன் குமார ரணசிங்ஹ என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது தீர்மானத்தை அறிவித்துள்ளாராதாலும்,

கரந்தெணிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் வேவெல்வல ஹேவகே ரவீந்ர விஜய குமார ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு, ரணசிங்ஹ ஹெட்டி ஆரச்சிலாகே சமன் குமார ரணசிங்ஹ என்பவர் கரந்தெணிய பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**டப்லிவ். எச். ஆர். விஜய குமார,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
கரந்தெணிய பிரதேச சபை.

2025 ஒற்றோபர் மாதம் 29 ஆம் திகதி,
மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
காலி.

EOG 10 - 0280

1A - PG 7317- 09 (2025/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*